★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 கார்த்திகை 7 ஸபர் 17 இதழ் 28[illegible]

யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-11-83

## இந்திரா - ஜே. ஆர். சந்திப்பு:

### கூட்டறிக்கை இன்று வெளியிடப்படும்!

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்படும் களமாகக் கருதப்படும் புதுடில்லியில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலையும், நேற்றுக்காலையும் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரம் எதுவும் உடனடியாக வெளியிடப்படாத போதிலும் இச்சந்திப்பு தொடர்பான கூட்டறிக்கை ஒன்று இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் முயற்சிக்கு உதவ இந்தியப் பிரதமர் முன்வந்த பின்னர் இருதலைவர்களுக்கு மிடையே நேற்றுமுன்தினம் மாலை முதலாவது சந்திப்பு இடம்பெற்றது.

இதற்கு பின்னர் பாரதப்பிரதமரின் சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியும் நேற்றுக்காலை இரண்டாவதுதடவையாக திரு. ஜெயவர்த்தனாவை சந்தித்து பேச்சு நடத்தினர். (கு)

★ "சமரசப் பேச்சுக்களின் முடிவுகள்

# தமிழ்மக்கள் அங்கீகாரத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்!"

### பாவனைப் பொருட்கள் விலை குறையும்

(கொழும்பு)

சவர்க்காரம், பற்பசை, மாஜரீன் உட்பட பல பாவனைப் பொருட்களின் விலைகள்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்கூட்டணி நிலைகுறித்து 'அமிர்' முதல் தடவையாக விளக்கம்

(புதுடில்லி)

"தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு சரியான திட்டமொன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சமர்ப்பிக்கும் பட்சத்தில் இதனைப் பரிசிலித்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொண்டால் இத்திட்டம் தமிழ்மக்களின் அங்கீகாரத்துக்காக விடப்படும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிசெயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் தற்போது தங்கியிருக்கும் இலங்கைப் பத்திரிகையாளர்களை திரு. அமிர்தலிங்கம் நேற்று சந்தித்தார். அக்பர் ஹோட்டலில் இடம்பெற்ற இச்சந்திப்பில் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், கலாநிதி நீலன் திருச்செல்வம், இரா, சம்பந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டசபை இயங்காததால்

## உப அலுவலகங்களில் வேலை தாமதிக்கக்கூடாது!

### அமைச்சர் விஜயக்கோன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை இயங்காத காரணத்தால் உப அலுவலகங்கள் செயலாற்றுமலோ அல்லது செயலாற்றுவதில் தாமதமோ இருக்கக்கூடாது என்று யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுக்காலை யாழ். மாவட்ட அபிவிருத்திசபையைத் திறம்பட செயல்படுத்துவது சம்பந்தமாக மாவட்ட அமைச்சரின் அலுவலகத்தில் ஆராயப்பட்டபோது மேற்குறிப்பிட்ட உத்தரவை அமைச்சர் வழங்கினார்.

யாழ். மாவட்ட அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரின்ஸ் குணசேகரா விரைவில் விடுதலை

(கொழும்பு)

"ஜூலை இனக்கலவரங்களின் போது கைதுசெய்யப்பட்டு தற்போது தடுப்புக்காவலிலிருந்து வரும் முன்னாள் எம். பி. திரு. பிரின்ஸ் குணசேகரா உடனடியாக விடுதலை செய்யப்படுவார்."

(8ம் பக்கம் பார்க்க)

## "நாட்டில்இனஐக்கியத்திற்கு இன்று அச்சுறுத்தல்"

### பாராளுமன்றத்தில் பிரதமர் கவலை

(கொழும்பு)

"நாட்டில் இனஐக்கியத்திற்கு இன்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சட்டம், அமைதி சீர்குலையும் ஆபத்து உருவாகிவருகிறது. இதனால் அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்கவேண்டியுள்ளது"

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகால நீடிப்புப் பிரேரணை மீது உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையில் இனப்பிரச்னையைத்தீர்க்க அரசாங்கம் முயன்றுவருகிறது. நாடு இன்று மிகவும் பயங்கரமான நிலையிலுள்ளது. இதிலிருந்து நாட்டை மீட்கவேண்டும்.

"அரசாங்கம் பயங்கரவாதிகள் தொடர்பான செய்திகளுக்கும், இனவாதத்தைத் தூண்டுகின்ற செய்திகளுக்கும் தணிக்கை மூலம் தடைவிதித்துள்ளது.

"கிறிஸ்தவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். முஸ்லிம் கிறிஸ்தவ வணக்க ஸ்தலங்களின் முன்னால் சுவரொட்டிகளை ஒட்டி சில தீயசக்திகள் பொய்ப்பிரசாரம் செய்துவருகின்றன.

"மக்களை அழிக்க சிலர் சூசகமாக காரியமாற்றி வருகின்றனர். கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்களை அழிக்க இவர்கள் முயல்கின்றனர்"

"வடக்கு, கிழக்கிலுள்ள ஆயுதப்படைகள் முகாம்களில் இருக்கவேண்டிய நேரத்தில் முகாம்களில் இருப்பார்கள். வெளியிலிருக்க வேண்டிய நேரத்தில் வெளியில் இருப்பார்கள்" என்றார். (இ-வெ)

"ஒரே மாதத்தில்

## வடக்கு, கிழக்கில் ரூ. 25 லட்சம் கொள்ளை"

### அமைச்சர் வின்சன்ட் தகவல்

[கொழும்பு]

"கடந்த மாதம் வடக்கிலும், கிழக்கிலும் 25 லட்சம் ரூபா பெறுமதியான பணமும், பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியஇடங்களில் 24 கொள்ளைகள் இடம்பெற்றது."

இவ்வாறு பாராளுமன்ற, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்செண்ட் பெரேரா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகால நீடிப்புப் பிரேரணை மீது உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

(8ம் பக்கம் பார்க்க)

"சுங்க ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்"

24 - 11 - 83 வியாழக்கிழமையும், 26 - 11 - 83 சனிக்கிழமையும் நடைபெறவிருந்த சுங்க ஏல விற்பனைகள்

எதிர்வரும் 29-11-83 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்திலும்,

30-11-83 புதன்கிழமை காலை 10 மணிக்கு காங்கேசன்துறை சுங்க அலுவலகத்திலும் நடைபெறுமென்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

செ. கணேஸ்
சுங்க சேகரிப்பாளருக்காக
யாழ். மாவட்டம்

10082

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கைலைன்ஸ்(Hy-Line)ஒருநாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விமாகி, 27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 24043. (10058)

தெல்லிப்பழையில்மகாஜனா, யூனியன் கல்லூரிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள 3 வீடு கட்டக்கூடிய சதுரக் காணி விற்பனைக்குண்டு மின்சாரவசதியுமுண்டு. க. இளையதம்பி, 'தனவாசா'', D. R. O. கந்தோர் ஒழுங்கை, தெல்லிப்பழை. 10018

திருநெல்வேலி, இராச பாதையில் 2½ பரப்புக்காணி தண்ணீர்பங்குடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ். 37, (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 10044

திருநெல்வேலியில் நாலு அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 10/7, சிவன்கோவில் வீதி. திருநெல்வேலி. 10047

சகல வேலைகளும் செய்யக் கூடிய மரவேலை இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கி. பாபநாசிவம், (சிவம்), மரத்தொழிற்சாலை, டச்சு றோட், சாவகச்சேரி. 10030

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன் கோ., 112, கே.கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (9916)

யாழ். நகர் நாச்சிமார் கோயிலடி 561 K K. S. வீதியிலுள்ள வீடுஉடனே விற்பனைக்குண்டு. 3 3/1பரப்பு விலை 8½. தரகர் வேண்டாம்- Dr. T. இரத்தினசிங்கம், ''மாரக்காய்'' புலோலி தெற்கு, புலோலி. 9906

நாவற்குழி ஸ்டேசனிலிருந்து 300யார் தொலைவில் கண்டி றோட்டில் கிணற்றுடன் கூடிய இரண்டு, 4பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு. பிற்பகல் 3மணிக்கு பின் தொடர்பு கொள்க, B. S. சர்மா, 596 பருத்தித்துறை வீதி. நல்லூர். 10074

பருத்தித்துறை 1ம் குறுக்குத் தெருவீதியிலிருக்கும் 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு, விபரங்கட்கு T. மதியாபரணம் 'கணேசவாச'' மெயின்றோட், பருத்தித்துறை. 10063

நல்ல நிலைமையிலுள்ள Toyata Hiace Van இலக்கம் 34ஸ்ரீ504 உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: T. மதியாபரணம் 'கணேசவாச' மெயின்றோட், பருத்தித்துறை. 10062

மாநகரசபை எல்லைக்குள் மாம்பழம் சந்திக்கு அண்மையில் மலர்மகள் வீதியில் வீடு கட்டக்கூடிய ஒன்றே முக்கால் பரப்பு காணி விற்பனைக் குண்டு. பரப்பு-75,000/- S. சிவராசா 63/2 மலர்மகள்வீதி, அரியாலை. போன் - 22155. 10057

## விற்பனைக்கு

நீர்வேலி மாசுவன் சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணம். பருத்தித்துறை இராசவீதியை முகப்பாககொண்ட 18பரப்பு அல்லது அரைவாசி(தோட்டம் செய்யவோ, வீடுகட்டவோ, தொழிற்சாலை அமைப்பதற்கோ ஏற்றது) மின்சாரம் கிணறு வசதிகளுடன் கூடிய தோட்டக்காணி விற்பனைக் குண்டு கு. வேலுப்பிள்ளை, நீர்வேலிவடக்கு, நீர்வேலி. 10066

## தேவை

தொடர்களஞ்சிய விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு கடை கட்டிடங்கள் வீடுகள் அல்லது காணி பெரும் வீதிகளில் தேவை. இவை கொள்வனவு அல்லது குத்தகைக்குஎடுக்கப்படும். K. பத்மநாதன் M. B. I M. முகாமை ஆலோசகர், Pathi (M and S) Services 76/2 புங்கன்குளம்வீதி, யாழ்ப்பாணம். 10056

மரத்தளபாடங்கள் பொலிசிங் செய்பவர்கள். தச்சுவேலை செய்பவர்கள் இவற்றில் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்கள் நற்சாட்சி பத்திரங்களுடன் நேரில் வரம். டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236. கே, கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். 10060

யாழ்ப்பாணம் - கண்டி வழியில் நாவற்குழியிலிருந்து கொடிகாமம் வரையிலுள்ள இடைப்பட்ட தூரத்தில் 6 ஏக்கர் காணி தேவை. மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். S. நாகராசா, 335 பாலாலிறோட், யாழ்ப்பாணம். டெலிபோன் 24274 (10034)

வார்ப்பு வேலைக்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. S. விக்னராஜா, 290, நாவலர் வீதி, நல்லூர். 10051

மணமகன் தேவை. பொது உயர்கல்வி (விஞ்ஞானம்) சித்த ஆயுள்வேத வைத்தியம் ஆகியவற்றில் சித்திபெற்ற 30 வயதுள்ள இந்துமத உயர்வேளாண்குலத்தைச்சேர்ந்த அழகும், பண்பும்பொருந்திய பெண்ணுக்கு பெற்றோர் பொருத்தயான அதேகுலத்தைச் சேர்ந்த M.B. B. S. டாக்டரை மருமகனாக ஏற்கவிரும்புகிறார்கள். வீடும் வளவும், பணமும் சீதனமாக வுண்டு. சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0055 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 10055

## வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் சி. எஸ். கே. சந்திக்கருகில், தொலைபேசி வசதியுடன் எந்த வியாபாரமும் உடன் ஆரம்பிக்கக்கூடிய கடை வாடகைக் குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ்,37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 10045

## WANTED

Wanted immediately English Typewriter and Sewing Machine in good condition. Furnish full particulars stating price Advt No: 10073 C/o Eelanadu, Jaffna. 10073

## தவறிவிட்டதா?

20-11-83 காலை 9-30 மணியளவில் கல்வியங்காடு ''நஷனல் வீடியோ சென்ரர்'' கடைக்கு முன்னால் நின்ற 003 A B 7136 (நம்பர் தகடு 2472) இலக்க எனது ஏசியா சைக்கிள் தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக நின்ற 003 A B 678 இலக்க ஏசியா சைக்கிள் என்னிடமுள்ளது. உரியவர் மாற்றி எடுத்துச் செல்லவும். M. குருநாதன், 184 (40) பிறவுண் றோட், யாழ்ப்பாணம் அல்லது சோலை வரிப்பகுதி, மாநகரசபை, யாழப்பாணம். (10069)

## வகுப்பு

Scientific Cutting Cake icing, Shorteats Hairstyle ஆகியவற்றிற்கு திங்கள், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விபரங்கட்கு The Ladies Academy இல. 27, 3வது ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 10071

## ★ தேவை ★

கையினால் இயக்கும் தையல் மெஷின் தேவை. பழுதடைந்த நிலையில் இருப்பினும் அதற்கேற்ற விலைகொடுத்துப் பெற்றுக் கொள்வோம். மெஷின் பற்றிய விபரங்களுடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும்,

1. மெஷின் இனம்
2. றேட் மாக்
3. சட்டில் வகை
4. உற்பத்தி செய்யப்பட்ட இடம்

விளம்பர இல: 10072
மே/பா ஈழநாடு,
யாழ்ப்பாணம்.
10072

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை கிழக்கு காலஞ்சென்ற சிதம்பரநாதன் கைம்பெண் பாக்கியத்தின் மரணச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்

இல: T 3714

பொன்னையா ஞானேஸ்வரன், வட்டுக்கோட்டை கிழக்கு வட்டுக்கோட்டை.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம் கு. குலசிங்கம்
பதிவாளர்.

1983ம் ஆண்டு கார்த்திகை 18ம் திகதி.

10020

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்கான
வகுப்புக்கள் — 1984 ஆகஸ்ட்

★ கலை ★ விஞ்ஞானம் ★ வர்த்தகம்

யாழ்நகரின் பிரபல விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் போதிக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

பகல் நேர வகுப்புகள் மாத்திரம்
காலை 9-00 — மாலை 3-00

ஆரம்பம்: 1 - 12 - 1983

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**நிரு டியூசன் சென்றர்**

புகையிரதநிலையவீதி, கோண்டாவில்

G. C. E. A/L 84, 85

தூய, பிரயோக கணிதம் நடைபெறுகின்றது

அடுத்த பகுதி:

1. தூயகணிதம்: இருபடிச் சமன்பாடு
2. பிரயோககணிதம்: சார்பு வேகம்

ஆசிரியர்:

**A. பத்மநாதன்** 10052

## ஓராண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி தில்லையர்**

தோற்றம்: 1-6-1901 மறைவு: 3-12-1982

திதி. 23-11-83

அன்பின் பிறப்பிடமாய் அறிவின் உறைவிடமாய், பண்பின் இருப்பிடமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே. தந்தை என்ற தானத்தில் இருந்து சொல்லில் எழுத முடியாத அளவிற்கு குடும்பத்திற்கும், பிள்ளைகளுக்கும் தொண்டாற்றினீர்கள். உங்களைப் போன்றவரை தந்தையாக அடையப்பெற்றது நாம் முன்னாள் செய்த தவப்பயனே. நாம் ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் உம்மைப்போல் தந்தையைப் பெறுவோமா. ஒளி தரும் கதிரவன் மறைந்ததுபோல் எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்துவிட்டீர்கள். உங்கள் அன்பு எங்கள் நெஞ்சை விட்டுநீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(9793)

G. C. E. (A/L) தூய பிரயோக கணிதம்

ஆசிரியர்: RAVIMOHAN

தற்பொழுது வகுப்புகள் நடைபெறும்

**புதிய முகவரி**

**No: 74, மணிக்கூட்டு வீதி,**

யாழ்ப்பாணம்.

[வெலிங்டன் சந்திக்கும்
பெருமாள் கோவிலுக்கும் இடையில்]

(10023)

### அணு ஆயுத உற்பத்திக்கு

# 43 நாடுகளின் 12,000 அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் ஆட்சேபனை!

நியூயோர்க், நவ. 22

**''அணு ஆயுத உற்பத்திகளில் கட்டுப்பாடு கொண்டுவரப்படவேண்டும். அணுசக்தி ஏவுகணைகளை நிறுவுவதை நிறுத்தவேண்டும்'' என்று நாற்பத்திமூன்று நாடுகளைச் சேர்ந்த பன்னிரெண்டாயிரம் அணுசக்தி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் அணு ஆயுத உற்பத்தி நாடுகளிடம் விண்ணப்பித்துள்ளனர்.**

இந்த விஞ்ஞானிகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கும் தமது விண்ணப்பத்தை அனுப்பியுள்ளனர். அத்துடன் உலகிலுள்ள பல பொது ஸ்தாபனங்களுக்கும் அதன் பிரதிகளை அனுப்பியுள்ளனர்.

இதேவேளை கனடியப் பிரதமர் திரு. ட்ரூடோவும் அணு ஆயுத பயமுறுத்தல்கள் குறித்துக் கவலைகொண்டுள்ளார். அவர் அண்மையில் சோவியத் யூனியன் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து அணுசக்தி ஏவுகணைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய்ந்தார். அத்துடன் அணு ஆயுத நாடுகளான சோவியத் யூனியன், சீனு ஆகியவற்றுக்கு அவர் தமது நாட்டுப் பிரதிநிதிகளையும் அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்தும்படி வலியுறுத்த அனுப்பிவைத்துள்ளார்.

மேற்கு ஜெர்மனியில் தொடர்ந்தும் 'நேட்டோ' அணுசக்தி ஏவுகணைகள் நிறுவப்படுவதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் மேற்கு ஜெர்மன் பாராளுமன்றத்தினுள் அத்துமீறிப் பிரவேசிக்க முனைந்தனர். ஆனால் ஜெர்மன் பொலிசார் அவர்களை மிகுந்த சிரமப்பட்டுத் தடுத்து நிறுத்தினர்.

மேற்கு ஜெர்மன் அதிபர் திரு ஹெல்மட் ஹோல், ''வார்ஸோ நாடுகளுடன் அணுஆயுத பலத்தில் சமநிலையைப் பேணவே நேட்டோ நாடுகள் ஐரோப்பாவில் தமது ஏவுகணைகளை நிறுவ முடிவு செய்துள்ளன'' என்றார். (கி)

# காமன்வெல்த் மகாநாடு இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

''அணுஆயுத உற்பத்தி உலக இராணுவ பலம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது பற்றியும், மூன்றும் உலக வறிய நாடுகளின் பிரச்னைகள் குறித்தும் ஆராய்வது புதுடில்லி பொதுநலவாயஅமைப்பு நாடுகளின் உச்சி மகாநாட்டில் முக்கிய அம்சமாக இருக்கும்'' என்று பொதுநலவாய அமைப்பு(காமன்வெல்த்) நாடுகளின் செயலாளர் திரு. ஸ்ரீதத்ரம்பால் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''வல்லரசுகள் நிமிடமொன்றுக்கு ஒரு கோடி டாலர்களை ஆயுத உற்பத்திக்குச் செலவிடுகின்றன, ஆனால் இத்தொகையையே வருடமொன்றுக்கு வறுமை நாடுகளில் பசிப்பிணியை நீக்குவதற்குச் செலவிடவேண்டியுள்ளது. எனவே அர்த்தமற்ற ஆயுத உற்பத்தி, இராணுவ அதிகரிப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றார்.

இதேவேளை புதுடில்லிக்கு பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பலரும் வந்துவிட்டனர். இவர்கள் அனைவரும் புதுடில்லியிலுள்ள 'அசோக்' ஹோட்டலில் தங்கியுள்ளனர். இந்த ஹோட்டலும் அதன் சுற்றுப்புறமும் பலத்த பாதுகாப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளது.

சுமார் 33 பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் புதுடில்லி வரவிருப்பதை பிரதமர் இந்திராவிடம் ஊர்ஜிதம்செய்துள்ளனர். 48 நாடுகள் பொது நலவாய அமைப்பில் அங்கம் பெற்றுள்ளன.

தலைவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது; ஆர்ப்பாட்டம் செய்வதுபோன்ற நடவடிக்கைகளை முறியடிக்க விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 30 ஆயிரம் துருப்புகள் புதுடில்லிக்கு வெளியேயுள்ள மாநிலங்களிலிருந்து அழைக்கப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் புதுடில்லியில் உலகத் தலைவர்கள் பலர் கூடும் இரண்டாவது பெரும் உலக மகாநாடு இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

கிரனடா, சைப்பிரஸ் விவகாரங்கள் இப்பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மகாநாட்டில் சூடுபிடிக்குமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (கி)

# 'நாட்டின் அளப்பரிய சொத்து விஞ்ஞான தொழில் நுட்பமாகும்'

(மட்டுவில்)

''உலகமாற்றம் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. ஆனால் இப்பொழுது துரித மாற்றங்கள் காணப்படுகிறது. பரந்து விரிந்துள்ள உலகம், விரைவில் ஓர் சிறிய வட்டத்துக்குள் அமைந்த சிற்றூராக மாறக்கூடிய நிலையை, பொதுசன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி உண்டாகவுள்ளது. ஆகவே இந்தமாற்றத்திற்கு ஏற்ப கல்வியின் வளர்ச்சியையும் பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. முருகையன் தொடர்ந்து கூறியதாவது:

''இயற்கையின்பால் உறைந்து கிடக்கும் சக்தியினைப் பிழிந்து மனித சமுதாய வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதற்கு விஞ்ஞானம் சிறந்த கருவியாகவுள்ளது. ஒரு நாட்டின் அளப்பரிய சொதது விஞ்ஞான தொழில் நுட்பமாகும். இவ்வறிவியலைக்கற்று வளர்ச்சி பெற்றுக்கொண்டே செல்ல முடியும். அதே நேரத்தில் பழைய பண்பாட்டினையும் மறந்துவிடக்கூடாது. உலக மாற்றத்திற்கு ஏற்ப கடந்த காலத்து எம் முன்னோரின் அருஞ்செல்வங்களை, இக்கால மாற்றங்களோடு, வருங்கால சிந்தனைகளோடும் இணைக்கும் ஓர் பாலமாக அமைக்கும் தகைமைசார் கல்வியை எமது சமுதாயத்திற்கு பாடசாலைகள் கொடுக்க வேண்டும். (க)

## அகாலிகள் தலைவர் தீவிரவாதிகளுக்கு எதிர்ப்பு

சண்டிகார், நவ. 22

பஞ்சாப் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை அகாலிகள் கட்சித் தலைவர் லோங்கோவல் கண்டித்துள்ளார்!

கடந்தவாரம் பஞ்சாப் அமிர்தசரஸ் நகரில் நான்கு பஸ் பயணிகளை பஞ்சாப் தீவிரவாதிகள் கொலைசெய்யதைத் தொடர்ந்தே தீவிரவாதிகளை அகாலிகள் கண்டித்துள்ளனர்.

''நிராயுதபாணிகளைக் காப்பாற்றுவது, அப்பாவிகளுக்கு அடைக்கலமளிப்பது என்பனவே சீக்கிய மதத்தின் போதனைகளில் அடங்குகின்றன. ஆனால், தீவிரவாதிகள் இவற்றை உதாசீனம் செய்துள்ளனர்'' என்று அகாலிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பஞ்சாப்பில் சர்வகட்சி மகாநாடொன்று தீவிரவாதிகளைக் கண்டித்து நேற்று நடைபெற்றது. இம் மகாநாட்டில் அரசியலில் எதிரும் புதிருமான கட்சிகள் பல ஒன்றாகச் சேர்ந்திருந்தன. ஜனதா, இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாரதீய ஜனதா கட்சி என்பன இம்மகாநாட்டில் கலந்த கட்சிகளில் அடங்கும். இவை ஒருமனதாகத் தீவிரவாதிகளைக் கண்டித்தன. (கி)

## சுவீப் முடிவு

(கொழும்பு)

திங்கட்கிழமை இழுக்கப்பட்ட 949வது இலக்க தேசியலொத்தர் சபை சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

1ம் பரிசு
**15 T 0677**
**ரூ. 2,00,000.00**

2ம் பரிசு
**12 D 0125**
**ரூ. 75,000.00**

3ம் பரிசு
**02 X 0707**
**ரூ. 25,000.00**

ரூ. 1290 ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 10 A 0190 | 12 A 0712 |
| 13 A 0657 | 17 A 0488 |
| 18 A 0988 | 21 A 0539 |
| 10 B 0002 | 15 B 0014 |
| 19 B 0974 | 07 C 0412 |
| 02 C 0874 | 07 C 0458 |
| 07 C 0647 | 16 C 0756 |
| 16 C 0966 | 17 C 0564 |
| 22 C 0930 | 18 D 0978 |
| 22 D 0415 | 07 E 0967 |
| 04 F 0883 | 06 F 0766 |
| 15 F 0905 | 01 G 0388 |
| 05 G 0651 | 06 G 0202 |
| 06 G 0392 | 11 G 0303 |
| 12 G 0171 | 20 G 0213 |
| 04 H 0994 | 05 H 0447 |
| 09 H 0079 | 14 H 0089 |
| 04 J 0953 | 21 J 0120 |
| 04 K 0551 | 06 K 0936 |
| 11 K 0399 | 12 K 0321 |
| 17 K 0861 | 20 K 0640 |
| 22 K 0702 | 08 L 0445 |
| 10 L 0831 | 15 L 0345 |
| 16 L 0927 | 17 L 0368 |
| 20 L 0979 | 16 L 0322 |
| 09 M 0152 | 16 M 0850 |
| 07 N 0821 | 17 N 0883 |
| 12 N 0676 | 18 N 0115 |
| 03 O 0816 | 05 O 0841 |
| 06 O 0452 | 08 O 0997 |
| 12 O 0739 | 15 O 0825 |
| 19 O 0628 | 10 P 0197 |
| 16 P 0143 | 06 Q 0563 |
| 10 Q 0900 | 15 Q 0952 |
| 16 Q 0176 | 19 Q 0720 |
| 13 R 0721 | 14 R 0680 |
| 19 R 0180 | 21 R 0546 |
| 04 S 0318 | 15 S 0777 |
| 18 S 0280 | 11 T 0607 |
| 15 T 0253 | 17 T 0878 |
| 03 U 0576 | 10 V 0356 |
| 10 V 0759 | 15 V 0097 |
| 17 V 0417 | 03 W 0445 |
| 04 W 0247 | 04 W 0404 |
| 13 W 0263 | 15 W 0767 |
| 07 X 0052 | 22 X 0279 |
| 01 Y 0108 | 01 Y 0734 |
| 03 Y 0132 | 02 Z 0809 |
| 07 Z 0600 | 11 Z 0487 |
| 14 Z 0103 | 18 Z 0487 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை) (இ)

## டீசல் தட்டுப்பாடு

(துணுக்காய்)

துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் மல்லாவி எரிபொருள் நிலையத்தில் அடிக்கடி டீசல், மண்ணெண்ணை, தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள், விவசாயிகள், உழவு இயந்திர சொந்தக்காரர்கள் பல கஷ்டத்திற்குள்ளாகிவருகின்றனர். இதனால் கூடிய விலை கொடுத்து தனியார்கடைகளில் வாங்கவேண்டியுள்ளது.

## சூரனின் தலை மர்ம மறைவு

### பொலிசில் புகார்

(மட்டுவில்)

சூரன்போர் உற்சவத்திற்கு முருகன் புறப்பட்டார். சூரனும் புறப்பட்டார். ஆனால் சூரனின் தலையைக் காணவில்லை. அது மர்மமாக மறைந்து விட்டது!

இது பற்றி உடனடியாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது.

இப் பரபரப்பூட்டும் சம்பவம் சாவகச்சேரி புளியந்திடல் முருகன் ஆலயத்தில் நடைபெற்றுள்ளது.

ஆலய நிர்வாகிகளுக்கிடையில் ஏற்பட்ட மனக் கசப்புகளே சூரனின் 'தலை' மறைவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

வேலாயுதம் வைத்திலிங்கம் என்பவரே சாவகச்சேரிப் பொலிசில் இது பற்றி புகார் செய்துள்ளார்.

1982ம் ஆண்டிலும் கந்தசஷ்டி சூரன் போர் அன்று இச் சூரனின் தலை மர்மமாக மறைந்ததாம்! (க)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-02 'பிக் புளூமாபிள்' கல்வி நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 'வெர்ஸல் கம்மிட்ஜ்' சிறுவர் நகைச்சுவை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-15 நடப்புநிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் (சிங்களம்)
7-45 கலந்துரையாடல் (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8 30 'திமுத்து முத்து' தொலைக்காட்சி நாடகம் (சிங்களம்)
9-15 'அன்னையும் பிதாவும்' தமிழ்த் திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 நிகழ்ச்சிகள் முடிவு

## பெருங்கதை உற்சவம்

[வண்ணார்பண்ணை]

விநாயகப்பெருமானின் பெருங்கதை உற்சவம் நேற்றுமுன்தினம்வடக்கில் பெரும்பாலான ஆலயங்களில் ஆரம்பமாகியது தொடர்ந்து 21 தினங்கள் இது இடம்பெறவிருக்கிறது. கந்தசஷ்டி விரதத்தைதொடர்ந்து, கார்த்திகைத்தீப வைபவமும், அதைத்தொடர்ந்து விநாயக விரதமும் ஆரம்பமாகியுள்ளது.

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தில் இம்முறை இப்பெருங்கதை உற்சவம் சிறப்புற நடைபெறுகிறது. (வண். நிரு)

### மணிவாக்கு

இலட்சியம் உன்னதமாக இருக்க வேண்டும். கோரிய பயனை அடைவது ஈசன் அருள். ஆனால் கடைப் பிடிக்கும் முறைகளுக்கு நாமே பொறுப்பாளி. பலன்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. இதுவே உண்மை ஜனநாயக தத்துவம்.

—ராஜாஜி

## நமது நோக்கு

## புதுடில்லி பொதுநல அமைப்பு மாநாடு

இன்று புதுடில்லியில் ஆரம்பமாகும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் 44 நாடுகளிலிருந்து 150 பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இந்த அமைப்பின் மிகப் பெருந்தேசம் இந்தியாவென்ருல், இன்று இந்தியாவில் முதல் தடவையாகக் கூடும் 24வது மாநாடு வரலாற்றுப் பெருமை கொண்டது.

இந்தியாவில்லையேல் இம்மாபெரும் ஸ்தாபனம் உருவாகியிருக்க முடியாது.

மாநாடுகள் எவையென்ருலும் ஒரு பெரும் உல்லாசப் பயணத்தையே குறிக்கின்றன; இலங்கையை விட்டு வெளியேறி ஒருவாரமாவது வேற்று நாடு செல்வதானல் இன்று அது பெரும் அதிர்ஷ்டம்.

ஒருவாரம் டில்லியில் நடைபெறும் இம்மாநாட்டில் எத்தனை கொண்டாட்டங்கள், இன்பகரமான நிகழ்ச்சிகள், கூடிக்குலாவிப் பேசும் வசதிகள்.

இங்கு கூடும் நாடுகளின் பொதுநலம் என்ற பேரில் என்னதான் பேசப்படாது? வானத்தைப் போல மிக விரிந்த பரப்பு இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரல்.

மேற்கு-கிழக்கு அரசியல் நெருக்கடிகள், வடக்கு-தெற்கு பொருளாதார விவகாரங்கள்-இவை அனைத்துலகையும் திரட்டிவிடும் விடயங்கள்; எவரும் எதையும் பேசலாம்; ஒரே ஒரு நிபந்தனை: மாநாட்டின் அமைதிச் சூழ்நிலை குழம்பாது பேசும் கலையில் திறமை வேண்டும்; பிரம்மாண்டமான ராணுவ பாதுகாப்பு உண்டென்பது தெரிந்ததே.

பாரதூரமான தீர்மானங்கள் செயற்திட்டங்கள் முடிவில் உருவாகுமா? அவ்வித அவசியமற்றதொல்லைகளில் இந்தப் பொதுநல மாநாடு தலைபோடுவதில்லை.

இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் கிறனடா, சைப்பிரஸ் நெருக்கடிகளுக்கென்ன நடக்கும்? கரிபியன் பிரதேசத்துக்குச் சொந்தமானவரே பொதுநல அமைப்பு நாடுகள் ஸ்தாபனசெயலாளர் சிறிடத் றம்பால் அவர்கள். கிறனடாவின் உடனடி அமைதியைப்பாதுகாக்க ஒரு பாதுகாப்புப் படையை இந்தஸ்தாபனம் அனுப்ப வேண்டுமென்று துடிதுடிக்கிருர்.

அது எவ்வாறு பொருத்தமானதென்பது இந்தியப் பிரதமரின் சந்தேகம்.

அவ்வித நடவடிக்கை ஐ. நாவைப் பொறுத்தது என்பது பிரதமர் இந்திராவின் கருத்து; ஐ.நா. தான் ஏதும் இலகுவில் செய்துமுடிக்குமா? தடபுடலான விவாதம் நம்பிக்கை; அதற்கு மேல் சந்தேகம்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்தப் பலவீனத்தை நன்கறிந்தவை. தெரிந்து தெரியாமல் எங்கும் தங்கள் 'வாலை' விட முடியுமானல் எவரும் அதன் ஆழத்தை அளவிடுவது நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்த்தற்குச் சமானமாகும்.

எனவே இன்றைய மகாநாடு மட்டுமல்ல, ஐ. நா. தானும் இன்று உலகில் நடந்தேறிய, நடைபெறுகின்ற, நடக்கக் கூடிய இராணுவ நாகரிகத்தின் குத்துக்கரணங்களைத் தடுக்கும் வழியில் கருத்தொற்றுமை கொண்டிருக்கவேண்டும்; அதற்கு உலக அபிப்பிராய உறுதுணையாக வேண்டும்

புதுடில்லியில்கூடும் பொதுநல அமைப்பு நாடுகளில், கறுப்பர் வெள்ளையர் என்று பாகுபாடு நீங்க திடமான கொள்கைகள் அலசப்பட்டு நடை முறைப்படுத்தப்பட வேண்டும்; இது முடியுமானல் உலகில் நன்மைக்குரிய மாற்றம் ஏற்படும்.

உலக அரங்கில் அடிபடும் பெருவிடயங்கள் ஒருபுறமிருக்க, எங்கள் நாட்டுக்கு அங்கு என்ன உடனடி நன்மை கிட்டும்?

இக்கட்டத்தில் இந்தக் கேள்வியைக் கேளாதவர் இங்கு எவருமுண்டோ?

பெருந் தேர்த்திருவிழாவிற்கு போய் வந்தபோதும் வீட்டுக்கு கடலை வாங்கி வருவது மிகஅவசியமானது. அதேபோல மகாநாடு முடிந்து திரும்பும் போது எங்கள் நாட்டுக்கு பரிசு ஏதேன் கிடைக்குமா?

சைப்பிரஸில், துருக்கியர் சட்டவிரோதமாக தங்கள் பிரதேசத்தில் சுதந்திர பிரகடனம் செய்துவிட்டார்கள் என்ற செய்தி அவசியமற்ற பரபரப்பை இந்நாட்டில் ஏற்படுத்துகிறது.

இதன் விபரீதம் என்னவென்ருல் இங்கு பிணக்குறும் இரு பகுதிகளுக்கும் ஒரே கணத்தில் இச் செய்தி இன்பமும் துன்பமும் அளிக்கிறது

அதன் தாற்பரியம் பின்வருமாறு: சைப்பிரஸில் நடந்தேறிய விடயம் வெற்றியில் முடியாது; எனவே ஈழம் கோருவோர் மண்கவ்வுவார்; அதே சமயம் அங்கு நடந்தது இங்கும் நடக்கலாம். ஜாக்கிரதை; இது துன்பமான பகுதி: சங்கடமான நிலை.

எந்த ஒரே நோயால் பீடிக்கப்பட்ட இருவர், தத்தம் வேறுபாடுகளுக்கேற்ப நோயும் வேறுபட்டதே என்பது மருத்துவ கோட்பாடு.

அரசியலிலும் அது பொருத்தமான கருத்து. இலங்கை விடயம் வேறு. சைப்பிரஸ் விடயம் வேறு. இந்த வேறுபாடுகளையும், இவ்வேறுபாடுகள் மாறுபாடுகளாக மாருது தவிர்க்கக்கூடிய உபாயங்களையும் புதுடில்லி பேசும்; மாநாட்டில் அல்ல,

மாநாட்டு மண்டபங்களுக்கு வெளியே, அமைதியான சன சந்தடியற்ற சூழ்நிலையில் சிறு சந்திப்புக்களில் ஆராய்ந்து நல்ல முடிவெடுக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன; எனவே எமது நாட்டில் மௌனம் அவசியம். இப்பெரும் மாநாடுகள் உத்தியோகபூர்வமற்ற இவ்வித அரிய சந்தர்ப்பங்களை உதவுவதே இவற்றின் முக்கியமான அம்சம்; அதுவும் பிரிட்டிஷ் மகாராணியும், அவசியம் ஏற்பட்டால், தமதுஆசியை உதவ கையோடிருப்பது ஒரு பெரும் வரப்பிரசாதமல்லவா?

## புதுடில்லியில் இன்று ஆரம்பமாகும் 'காமன்வெல்த்' மகாநாடு

# சிக்கலான பலபிரச்னைகளுக்கு தீர்வாக அமையுமா?

உலகின் பெரும்பாலான நாடுகளைத் தனது குடியேற்றங்களாக வைத்திருந்த பிரிட்டன் காலக்கிரமத்தில் அந்த நாடுகளைத் தனது பிடியிலிருந்துவிடுவித்து அவற்றுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானது. அவ்வாறு குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கியபோதும் பிரிட்டன் அந்த நாடுகளுடனான தனது உறவினை வேருெரு வகையில் தொடர்ந்தும் வைத்திருக்கவே விரும்பியது. இந்த வகையில் உருவாகியதே பொதுநலவாய நாடுகள் எனப்படும் காமன்வெல்த் அமைப்பாகும். இது ஆரம்பத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் அமைப்பு என்றிருந்தன. 1914ம் ஆண்டு அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் ஜெனரல் ஸ்மட்ஸ் பொதுநலவாய அமைப்பு என மாற்றஞ் செய்தார்.

பிரிட்டனின் காலனித்துவ நாடுகள் அனைத்தும் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பில் இன்று 150 கோடி மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 48 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. வங்காள தேசம் 1972 ஏப்ரலில் இந்த அமைப்பில் சேர்ந்துகொண்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் இதிலிருந்து விலகிக்கொண்டது. ஆயினும் மீண்டும் காமன்வெத்தில் சேர்ந்துகொள்ளப் பாகிஸ்தான் விரும்பி விண்ணப்பித்தபோதும் இன்னமும் அதுசேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்த அமைப்பில் கடைசியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நாடு இந்தவருடம் சுதந்திரம்பெற்ற கிறிஸ்தோப்பர் நேவிஸ் என்ற நாடாகும்.

இந்த அமைப்பிலுள்ள நாடுகளுக்கிடையிலான தொடர்பானது பரஸ்பரம் சம அந்தஸ்து, நல்லெண்ணம், உறவுகளைப் பேணி நட்பினை வளர்த்துக் கொள்வது என்ற அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

சேர்ந்த சிறிதத் ரம்பால் செயற்பட்டு வருகிருர். இவர் ஒரு இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. பொதுநலவமைப்பு நாடுகளின் இலட்சியங்களைச் செயற்படுத்துவதில் இவர் தீவிர அக்கறைசெலுத்தி வருகிருர். குறிப்பாக வளர்ந்த-வளரும் நாடுகளிடையே இணைப்பினை ஏற்படுத்த இவர் ஒரு பாலமாகச் செயற்படுகின்ருர் என விமர்சிக்கப்படுகிறது.

— ஏ. பி. சூரியகாந்தன் —

பொதுவாக உலக நாடுகள் அனைத்தும் சுதந்திரமாக வாழ்வதும், நாடுகள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதும், அந்நாடுகளின் நட்பைத் தொடர்ந்து பேணி நீதியான சமுதாயத்தை உலகில்தோற்றுவிப்பதுமே இதன் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக உலக பொருளாதாரத்தில் வறிய-செல்வந்த நாடுகளிடையே ஏற்றத் தாழ்வினை நீக்கி உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தும் 'வில்லி பிராண்ட்'' கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதிலும் இந்த அமைப்புத் தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது.

காமன்வெல்த்தின் செயலாளர் நாயகமாக கயானவைச்

இன்று புதுடில்லியில் ஆரம்பமாகும் மகாநாடு தொடர்ந்து 6 நாட்கள்வரை நடைபெறவுள்ளது இம்மகாநாட்டிற்கு மேற்கு நாடுகளிலிருந்து 13நாடுகளும், ஆசிய பசுபிக் பிராந்தியங்களிலிருந்து 17 நாடுகளும், ஆபிரிக்காவிலிருந்து 15 நாடுகளும், மேற்காசியாவிலிருந்து 3 நாடுகளுமாக மொத்தம் 48 நாடுகள் கலந்துகொள்கின்றன.

புதுடில்லி மகாநாட்டினை காமன்வெல்த் தலைவி என்ற முறையில் பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் தொடக்கி வைக்கவிருக்கின்ருர். இம்மகாநாட்டில் உலக சமாதானத்தின் அவசியம் குறித்து பாரதப் பிரதமர்

(5-ம் பக்கம் பார்க்க)

(இன்று பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா பிறந்ததினம்)

# தெய்வத்தன்மையை உணர்த்தும் ஸ்ரீ சத்யசாயிபாபா அவதாரம்

— நா. முத்தையா - ஆத்மஜோதி

பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா அவர்கள் இன்னும் ஈழத்தில் காலடி எடுத்து வைக்கவில்லை. ஆனல் அவருக்கோ ஈழத்தில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் இருக்கிருர்கள். ஒரு சிலர் இந்தியா சென்று பகவானைத் தரிசனை செய்துதிரும்பியுள்ளார்கள். பகவானே சூக்குமத்தில் எப்பொழுதும் தனது பக்தர்களுடன் இருக்கின்ருர். இதனைப் பல பக்தர்களும் உணர்ந்துள்ளாரிகள். பகவானும் பல பக்தர்களுக்குச் சூசகமாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளார்கள்'

'நாமிருக்கப் பயமேன்'' என்பது பகவானுடைய ஆப்தமொழி இதனை உணர்ந்துபயன் பெற்றவர்கள் எத்தனையோ யேரி பகவானுடைய பக்தர்களில் பலர் தமது அனுபவங்களைக் கூறுவதற்குவாய்திறந்த உடனேயே பகவான் ''எல்லாம் தெரியுமே'' என்றுகூறிச் சாட்சியமும் வைத்துவிடுகிருர்கள். இதனல் பகவான் எப்பொழுதும் தம்முடனிருப்பதைப் பக்தர்கள் இலகுவில் உணர்ந்துவிடுகின்ருர்கள்.

இறைவன் எங்குமுள்ளவன் என்பதை எல்லோரும் அறிந்திருந்தாலும் இறைவனுடைய இருப்பை உணர்ந்தவர்கள் மிகச்சிலரே பகவானுடைய சம்பந்தம் வைத்துக்கொண்டவர்கள், இறைவனை ஊனக் கண்ணாலும் பார்க்கும் பாக்கியம் பெற்று விடுகின்றனர். இறைஉணர்வு பெற்றவர்கள் இறைவன் தம்முடனே எப்பொழுதும் இருப்பதை உணர்கிருர்கள், அதனல் தீயநினைவுகளுக்கு ஆளாவதில்லை.

அவதார புருஷர்களை அறிந்து கொள்வது அரிதான காரியம். எல்லையற்ற அகண்ட வஸ்து எல்லைக்குட்பட்ட கண்டத்துக்குள் அடங்கியிருப்பதற்கு ஒப்பாகும். அவர்களதுவாழ்க்கை இத்தகைய மெய்ஞானிகளால் காயனை அகாயனுக்கமுடியும். கண்டனை அகண்டனுக்கமுடியும். பேயனைப் பிரம்மமாக்க முடியும்.

தீபம் தன்னைச்சுற்றியுள்ள பொருள்களை விளக்கிக்காட்டுமாயினும் அதனடியில் எப்போதும் இருட்டாகத்தான் இருக்கும். அதுபோல, அவதார புருஷருக்கு வெகு சமீபத்தில் இருப்பவர்கள் அவரைத் தெரிந்துகொள்வதில்லை. தூரத்திலுள்ளவர்கள் அந்த அவதார புருஷருடைய ஆத்மஜோதியாலும் அயதாரணமான சக்தியாலும் மனங்கனிந்து இன்பமுறுகின்றனர். இதேபோல் தான் இன்று பகவானை அவருடைய அவதாரம் நிகழ்ந்த இடத்தில் உணர்ந்தவர்களைக் காட்டிலும் ஈழத்தில் உணர்ந்தவர்கள் அநேகர் என்று கூறமுடியும்.

பூரண தெய்வீகத்தன்மையை மனிதனுக்குக் காண்பிக்கவே பகவானுடைய அவதாரம் நிகழுகின்றது. இத்தகைய அவதாரங்கள் மூலம் மனிதன் கடவுளோடு பேசுகின்ருன். கடவுளுடைய திருவிளையாடல்களை அவனல்காணவும் முடிகின்றது.

மலயமாருதம் வீசும் போது

(8-ம் பக்கம் பார்க்க)

### அருளாளா!

பல்லவி

என்னுள்ளம் கொள்ளை கொண்ட அருளாளா
இன்பம் பொழிவாய் இறை சாயிபாபா

அநுபல்லவி

பவக்கடலை பாவிநான் தாண்டவே
சிவசக்திநீ சித்தம் கோயில் கொள்வாய்

சரணம்

இன்ப துன்பத்தை சமமாக நோக்க
நன்மை தீமையை நடுநின்று பார்க்க
என்றும் ஓயாதே எண்ணம் பொங்கு முள்ளம்
ஒன்றி உன்னுடன் என்றும் ஒளிவீச

—''கரவைகிழார்''

யாழ். மாநகர சபை ஊழியரில்

# "10 வீதமானோருக்கு அக்கறையில்லை; 10 வீதமானோரிடம் லஞ்ச ஊழல்"

## ஆணையாளர் சாட்டை

(யாழ்ப்பாணம்)

"யாழ். நகர அபிவிருத்திக்கு நான் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மாநகரசபை ஊழியர்களில் 80சத வீதமானோர் பூரணமாக ஒத்துழைக்கிறார்கள், 20 சத வீதமானோர் அசிரத்தையாக பஞ்சிப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் 10 சத வீதமானோர் படுசோம்பேறித்தனமாக அக்கறையின்றி இருக்கிறார்கள். மிகுதி 10 சதவீதமானோர் சுரண்டல், ஊழல், லஞ்ச நடவடிக்கைகளில் சம்பந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள்."

யாழ். மாநகரசபை மாதாந்த ஊழியர் மாநாட்டில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### 'பெட்டிசம்' அனுப்புகிறார்கள்

இம் மாநாட்டிற்கு தலைமை தாங்கி பேசிய ஆணையாளர் திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது; "கடைசி 10 சத வீதமானோர் கையெழுத்தில்லாமல் பெட்டிசம் அனுப்புகிறார்கள். மொட்டைக் கடிதங்கள் அனுப்புகிறார்கள். அது மட்டுமல்ல இயக்கத்தின் பெயரால் எச்சரிக்கைக் கடிதங்கள்கூட எனக்கு அனுப்புகிறார்கள். இவர்களை நான் அடையாளம் கண்டு கொண்டேன், இவற்றை புரியாதவனுமல்ல. இதனைத் தெரியாதவனுமல்ல அதுவும் மாநகர சபைக்குரிய கடுதாசியில் மாநகரசபையின் தட்டச்சு யந்திரத்தில் அடித்து கடிதம் அனுப்புகிறார்கள். இயக்கத்தின் கடிதம் என்றால் அதில் சின்னமிருக்கும்; சீல் இருக்கும்; கடிதத் தலைப்பு இருக்கும்: முத்திரை இருக்கும். அரசியல் கட்சியினரோ, வரியிறுப்பாளரோ என்னிடம் கேட்பார்கள்: கேள்வி எழுப்புவார்கள். கையெழுத்தில்லாமல் மொட்டைக் கடிதம் அனுப்பமாட்டார்கள். இங்கு நடக்கும் ஒவ்வொரு விஷயங்களையும், தினமும் நடக்கும் நடவடிக்கைகளையும் எல்லோரும் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்: கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். எவரும் ஏமாற்றிவிடமுடியாது. கடமையை செய்யாது, கடிதம் அனுப்புவதால் பயனில்லை யாராக இருந்தாலும் தேவையான விசயத்தை வந்து நேரில் கேட்டால் தெளிவு படுத்துவேன்.

### பஞ்சிப்பட்டு தட்டிக்கழித்து

பொதுமக்களுக்கு குறைகள் இருக்கிறது. அவற்றை நாம் நிறைவேற்ற வேண்டும், பேசாமல், பஞ்சிப்பட்டு, வேலைகளை தட்டிக்கழித்து தாமதிப்பதனால்தான், சுரண்டல், லஞ்ச ஊழல் தாண்டவமாடுகிறது. வரியிறுப்பாளரின் வேலைகளை உடனுக்குடன் ஊழியர் செய்ய வேண்டும். எவரும் சும்மா இருக்க முடியாது. மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

இங்கு நடக்கும் லஞ்சம், ஊழல், சுரண்டல் எல்லாம் எனக்கு தெரியும். எந்த விஷயமானாலும் பொதுமக்கள் எனக்கு அறிவிக்கலாம். நான் நடவடிக்கை எடுப்பேன். எந்த ஊழியருக்காவது லஞ்ச ஊழலில் தொடர்பிருந்தால் எனக்கு அறிவியுங்கள், வரியிறுப்பாளர் வேலைகள் தாமதப்பட்டால் எனக்கு அறிவியுங்கள், தாமதம் லஞ்சத்துக்கு அறிகுறி.

### பத்திரிகைகள் ஒத்துழைப்பு

நகர அபிவிருத்திக்கு சகல பத்திரிகைகளும், பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றன. இந்த நேரத்தில் ஊழியர்களும் அதற்கு ஏற்ற விதத்தில் சேவையாற்ற வேண்டும், ஒவ்வொரு பகுதியும், மற்றப் பகுதியில் தங்கியிருக்கின்றது.

### கடைத்தெருவுக்குப் போகிறார்கள்

சில ஊழியர்கள் இங்கு வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, கலியாண வீடுகளுக்கும், கடைத்தெருக்களுக்கும் போகிறார்கள், சிலர் சந்தைக்கு சாமான் வாங்க செல்கிறார்கள். நான்கூட சிலரை கந்தோர் நேரத்தில் வழியில் கண்டிருக்கிறேன். இங்குவந்து வரவு இடாப்பைப் பார்த்த போது, அவர் கையெழுத்திட்டிருப்பார். இப்படி சில ஊழியர் நடந்து கொள்வதால் உண்மையில் நேர்மையாகக் கடமையாற்றும் ஊழியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர் வெளியில் போகிறார் நான் மட்டும் வேலை செய்வதா' என்ற எண்ணம் ஏற்படும்.

வீதி வேலைகளுக்கு 25 லட்சம் ரூபா கிடைத்துள்ளது. ஆனால் 50 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டுள்ள வீதி வேலைகள் இருக்கிறது.

### 'இந்துலாட்ஜ்' வரைப்படம்

கல்யாண மண்டப 'இந்து லாட்ஜ்' வரைபடம் தயாராகி விட்டது. கேள்விப் பத்திரம் கோர நடவடிக்கை எடுக்கப்படும் விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

உப-மின் நிலைய வேலைகள் டிசம்பருக்குள் முடிக்க வேண்டும். அதன்பின் மின்சாரத்தில் உள்ள குறைகள் நிறைவேறும் உப-மின் நிலையங்கள் இல்லாததினால் தான் சிலபகுதிகளில் வெளிச்சம் குறைவாக இருக்கிறது. வயர்கள் எல்லாம் பழையது. மின்சாரத்திற்கு 50 லட்சம் ரூபா கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு. அதன்பின் மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

நகரின் சில பகுதிகளில் மாலை 5 மணிக்கும் 10 மணிக்குமிடையில் வெளிச்சம் குறைவாக இருக்கிறது. இதனால் மாணவர்கள் படிக்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள் இந்த நேரத்தில் 'வெல்டிங் தொழிற்சாலை, அரிசி ஆலை, மற்றும் தொழிற்சாலைகளில் கூடிய மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இதனால் தான் சில பகுதிகளில் மின்சாரம் குறைகிறது. இத்தொழிற்சாலைகளில் மாலை 5 மணி முதல்10மணிவரைமின்சாரம் பாவிப்படுவதைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இரவு 10 மணிக்குபின் காலை வரை அவர்கள் பாவிக்கலாம் நாளைமுதல் மின்சாரபோர்மன் இரவில் தொழிற்சாலைகளைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### நடுவீதியில் கல், மணல்

புதிதாக வீடுகட்டுவோர் நடு ரோட்டில் கல், மண் பறிப்பதால், போக்குவரத்துதடைப்படுவதுடன், விபத்துக்களும் ஏற்படுகிறது. ஆதலால் வீட்டு உரிமையாளரை ஓவசியர் சந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் வீதியோரத்தில் குப்பை கொட்டும்போது ஒரே இடத்தில் போடவேண்டும். முள்ளுமரங்களை போடாமல் பரர்த்துக்கொள்ள வேண்டும் காணி வசதியுள்ளவர்கள், குப்பைகளை தங்கள் காணிக்குள் வெட்டித்தாக்கவேண்டும் அது பசளையாகப்பயன்படும்.

சினிமா தியேட்டக்களில், இடைவேளைக்கு மட்டுமின்றி படம் ஓடும்போதும் புகைக்கிறார்கள். என்று புகார்கள் கிடைத்துள்ளது. சட்டத்தை மீறி புகைப்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் தியேட்டர் உரிமையாளருக்கு இது பற்றி உடன் அறிவிக்கவேண்டும்.

### சைக்கிள் பாதுகாப்பு

பண்ணையிலுள்ள பஸ் நிலையத்தில், நாளைமுதல் சைக்கிள் பாதுகாப்புநிலையம் ஒன்று அமைக்கப்படும். இதற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. மீன்கடைகள், இறைச்சிக்கடைகளுக்கு செல்வோர் இனிமேல் சைக்கில்களை அங்கு தான் நிறுத்தவேண்டும். மாநகரசபை ஊழியர் ஒருவர் புதன்கிழமை முதல் அங்கு கடமையாற்றுவார்.

### யாழ். பஸார் விஸ்தரிப்பு

யாழ். பஸாரை விஸ்தரிப்பதற்காக பண்ணையையும், கொட்டடியையும் இணைக்கும் புதிய வீதி நிறுவப்படும் யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத்திற்குரிய இந்த 10 பரப்புக் காணியை சபை பொறுப்பேற்று இந்த வீதியை அமைக்கும் வீதியின் இருபக்கத்திலும் புதிய கடைகள் அமைக்கப்படும் சந்தை ஒன்றும் நிறுவப்படும்.

தீவுப்பகுதி பஸ்கள், பண்ணையிலிருந்து கொட்டடி வீதி ஊடாக, பஸ் நிலையத்திற்கு செல்ல ஏற்பாடுசெய்யப்படும். கொழும்பு செல்லும் தனியார் பஸ்கள், பண்ணையிலிருந்தே புறப்பட ஏற்பாடு செய்யப்படும் இது தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளரை சந்திக்கவிருக்கிறேன்.

பொதுமக்களின் புகார்கள் அன்றையதினமே உடனுக்குடன், அந்தந்தப்பகுதி தலைவர்களுக்கு அனுப்பப்படும் அதுபற்றி எடுக்கப்படும் நடவடிக்கைகளை தலைவர்கள், அத்தினமே எனக்கு அறிவிக்க வேண்டும்.

தேநீர்க்கடைக்காரர்கள், கழிவு நீரை வீதியில் ஊற்றி விடுகிறார்கள் இதனால் மக்களும் மாணவர்களும் பாதிக்கப்படுகிறார்கள் சுகாதார பகுதி ஊழியர்கள் இதனை கண்காணிக்கவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வாளி மல கூடங்களை நீரடைப்பாக மாற்றும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அங்கொன்று இங்கொன்றுமாக செய்யாமல், பகுதி பகுதியாக இத்திட்டத்தை அமுல் நடத்தப்போகிறேன்.

வீதிகளில் உள்ளகுப்பைகளை ஒரு கிழமைக்குள் சுகாதாரப் பகுதியினர் அகற்றி விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### சுகாதார வாரம் இல்லை

சுகாதார வாரம் இவ்வருடம் கொண்டாடுவதில் பயன் ஏற்படப் போவதில்லை. அலங்கார மேடையில்ஏறி அழகாகப்பேசுவதில் பயனில்லை. செயலில் இறங்கவேண்டும். சுகாதாரப் பகுதியினர்சுறுசுறுப்பாகவேண்டும் ஹோட்டல், தேநீர் கடைகளை சுகாதாரப் பகுதியினர் கண்காணிக்கவேண்டும். கடையின் முன்பக்கம் அழகாகத் தான்இருக்கும் அதைப்பார்த்து விட்டு திரும்பி விடக்கூடாது கடையின் பின்பக்கம்; அடுப்படிப்பக்கம் சென்று பார்க்க வேண்டும். சுகாதாரத்திற்கு மாறாக இருந்தால் லைசென்ஸைக் கூட ரத்துச்செய்யலாம்.

(க)

## இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழாவும் 12 ஆசிரியர்களுக்கான சேவைநலம் பாராட்டு விழாவும் இன்று புதன்கிழமை பிரஸ்தாப கல்லூரி அதிபர் எ. கே.இராசேந்திரம் தலைமையில் நடைபெறும்

கல்விப் பணிப்பாளர் எம். சிமியாம்பிள்ளையும் திருமதி சிமியாம்பிள்ளையும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

முன்னாள் மாவட்டசபை உறுப்பினர் இ. கிருஷ்ணராசா, கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி. வட்டாரக் கல்வி அதிகாரி எம். சண்முகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

## புதுடில்லி---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி இந்திரா காந்தியும், ஆயுதப் பரிகரணம் குறித்து கனேடியப் பிரதமர் ட்ரூடோவும் பிரதான உரையாற்றவுள்ளனர்.

உலக நாடுகள் பலவும் அரசியல் பொருளாதார ரீதியாகப் பல்வேறு பிரச்னைகளுக்குட்பட்டிருக்கும் இன்றைய நிலையில் ஆரம்பமாகும் புதுடில்லி மகாநாடு இப்பிரச்னைகளை ஓரளவாவது தீர்த்துவைக்க உதவுமென்பது பெரும்பாலான அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். புதுடில்லி பொதுநலவாய மகாநாடு பெரிய-சிறிய நாடுகளின் சிக்கலான பலதரப்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்வுகாணக்கூடியதாய் அமையுமென்பது காமன்வெல்த் செயலாளரின் முழுமையான நம்பிக்கையாகும்.

உலகத்தினை அச்சுறுத்தி வரும் சோவியத் - அமெரிக்க அணு ஆயுதப் பலப்பரீட்சை, சிறிய கிரனடாதீவுமீது அமெரிக்கா மேற்கொண்ட படையெடுப்பு, மேற்காசியாவில் போர்சூழ்ந்தநிலை, இந்து சமுத்திரம் அணு ஆயுதமற்ற சூனியப் பிரதேசமாக மாற்றப்படல், நபீபியாவின் சுதந்திரம், சைப்பிரஸில் அண்மையில் ஏற்படுத்திய துருக்கிய தனிநாடு, காமன்வெல்தில் அங்கம் வகிக்கும் சில சிறிய நாடுகளில் அண்மையில் வெடித்துள்ள இனப்பிரச்னைகள் என்பவற்றுடன் வளர்ந்த — வளரும் நாடுகளிடையே காணப்படும் பொருளாதார இடைவெளியை அகற்றல் போன்ற பலவேறு தீர்க்கப்பட முடியாத சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டியதும் இம்மகாநாட்டினைப் பொறுத்து அவசியமாகிறது.


## விளம்பரம்

யாழ்ப்பாணம்
அபிவிருத்திச்சபை
கைதடி உபஅலுவலகம்
மலகூட கூட்டுத்
தொழிலாளி

பதவிகளுக்கான
வெற்றிடங்கள்
(நிரந்தர பதவி-1
தற்காலிக பதவி-1)

மேற்படி பதவிகளுக்கு யா. அ. ச. கைதடி உப அலுவலகத்தால் ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் 06-12-83க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**வேதனம்:**

(1) நிரந்தர பதவி. வருடாந்தம் ரூ. 6,600-8 X 9 -7,320ம் சகல படிகளும்.

(2) தற்காலிக பதவி. வேலைநாள் ஒன்றிற்கு ரூ. 22/20ம் அதற்குரிய படிகளும்.

**வயது:**

06-12-83ல் 18வயதிற்குக் குறையாமலும் 35க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**பிறதகைமைகள்:**

(1) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

(2) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்கள் வைத்திருத்தல் வேண்டும்.

(3) 3ம் வகுப்பு வரையாவது கல்வித்தகைமைகள் இருத்தல் விரும்பத்தக்கது.

மேலும் விபரங்கள் தேவைப்படின் கைதடி உபஅலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

செ. தங்கராசா,
அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகஸ்தர்,
யாழ். அபிவிருத்திச்சபை
உபஅலுவலகம்,
கைதடி.

யாழ். அபிவிருத்திச்சபை,
உபஅலுவலகம்,
கைதடி. 21-11-83.

10065



NATIONAL (வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
A/L 84/85 தூய, பிரயோக கணிதம்
திரு. A. பத்மநாதன்
26-11-83
பௌதிகவியல் — திரு. விமல்ராஜ்
(10070)



வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கினேன்
டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

“ஒரு மாதத்துக்கு மேலாக பொலிஸ் காவலில்”

# நீதிமன்றத்தில் கணவனை ஆஜராக்குமாறு மனைவி மனு!

[மாவிட்டபுரம்]

பொலிசில் சரண்புகுந்த தமது கணவனை நீதிமன்றத்தில் ஆஜராக்காமல் ஒருமாதத்திற்குமேலாக பொலிஸ் காவலில் வைத்திருப்பதால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடுமாறு கோரி அவரது மனைவி மல்லாகம் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த இராசையா உதயணன் என்னும் வாலிபரைச் சுன்னாகம் பொலிசார் தேடிவந்ததையடுத்து அவர் பொலிசில்சரண் புகுந்தார்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜராக்காமை குறித்து சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் மேற்படி வாலிபரின் மனைவி வசந்தமலர் மல்லாகம் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

‘‘எனது கணவரைச் சுன்னாகம் பொலிசார் தேடுவதாக அறிந்து நானும், கணவரும் 19-10-83 ல் சுன்னாகம் பொலிசுக்குச் சென்றோம். பொலிசார் எனது கணவரைப் பொலிஸ் நிலையத்தில் நிற்குமாறு கூறி என்னைப்போகுமாறு கூறினர். அவரைப் பொலிஸ் காவலில் வைத்து இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பொலிசார் முன்வராமையால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடுமாறு கோருகிறேன்.’’

இவ்வாறு மேற்படி விண்ணப்பத்தில் கோரப்பட்டதையடுத்து நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராகி இதுபற்றி விளக்கம்அளிக்குமாறு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## ஆசிரியப் பணி பொறுப்பு மிக்கது

(நெடுந்தீவு)

நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் பணியில் மாணவர்களை உருவாக்கும் பாரிய பொறுப்புஆசிரியர்களைச் சார்ந்ததே. இதனால் ஆசிரியர் தொழில் இதர தொழில்களிலும் பார்க்க மிகவும் உயர்வாக எண்ணப்படுகிறது. இந்நிலையில் வெறும்ஊதியத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு பெயரளவில்ஆசிரியராக விளங்காது சேவை நிறைந்த கடவுட்பணி இது என்ற உணர்வுடன் ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும். எவன் தனதுதொழிலைச் சரியாகச் செய்கிறானோ அவன் இறைவனை மகிமைப் படுத்துகிறான்’’ என்று நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையின் இளைஞர் பாசறையின் இறுதிநாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் திரு செ. மகேசு கூறினார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய நெடுந்தீவு முன்னாள் பிரதேச சபைத் தலைவர் திரு சி.வ சங்கரப்பிள்ளை தொழிலுக்கு ஏற்ற சூழல், மூலவளம் என்பன பயன்படுத்தப்படாமல்அரசாங்க உத்தியோகங்களைமட்டும் இளைஞர்கள் எதிர்பார்க்கக் கூடாது நெடுந்தீவில் உள்ள மூலவளங்களைக் கொண்டு பல சிறு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட தென்னிந்திய திருச்சபை இளைஞர்களுக்கும்யுவதிகளுக்கும்வாய்ப்பளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றார். (ப)

## பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்).

முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்தின் பிரதம எழுது வினைஞர் திரு செல்லையா மெற்றுஸ் மயில் முதலாந்தர எழுது வினைஞராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் சேவையில் இருக்கும் காலத்தில் பல இலக்கிய ஆக்கங்களையும் வெளியிட்டார். அவற்றில் ‘‘வன்னிநாட்டில் அழிந்து செல்ல விருந்த நாட்டுப் பாடல்களை, ஏட்டிலிருந்து எடுத்து நூல் உருவில் வெளியிட்டார். இவர் தற்பொழுது ‘‘மூல்லைத்தீவு மாவட்டத்தின் மீன் பிடித் தொழிலும், சமுதாய பொருளாதார மாற்றங்களும்’’ என்னும் ஆராய்ச்சி நூலை எழுதி வருகின்றார்.

## இன்றைய பலன்

கார்த்திகை 7-ந் திகதி
புதன்கிழமை
(23-11-83)

மேடம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும் பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

இடபம்: சிறிய விடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்ற தினம்.

மிதுனம்: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும் அதிக சிந்தனைக்கு இடம் அளியாது வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

கடகம்: இல்லத்தில்இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும் இனபந்துக்கள்உங்களை உற்சாகப்படுத்துவார்கள் நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும் தானிய விருத்திக்கும் இடமுண்டு.

சிங்கம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமை தோன்றும் கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள் பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

கன்னி: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவைத்தேடித் தரும் தாய் வழிப் பெருமையுண்டு வாகன நலனுடன் வாழ்விலும் சுகம் காணுவீர் தெய்வத்தின் அருளும் வேண்டும்.

துலாம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு வெளியிடத்தில் இருந்துமகிழ்ச்சியைத்தரும்செய்தியும்கிடைக்கும்.

விருச்சிகம்: பகை மூட்டம் தோன்றும் பதட்டம் உடன் சேரும் மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப் போகும் ஆதரவு கொடுத்தவர்கள் முடிவில் கையை விரிப்பார்கள் கடன் தொல்லை அதிகரிக்கும்.

தனு: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம்பெறும் எதிர்ப்புகள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும் கண்ணியம் சேரும் கௌரவம் உயரும்.

மகரம்: குடும்பத்தில் சிறு பூசல்கள் தலைதூக்கும் பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றும் ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் தோன்றும் மன அமைதியுடன் இருக்கவும்.

கும்பம்; குருவின் ஆசியுடன் குறிக்கோள் வெற்றி காணும் குன்றென நிமிர்ந்து நிற்பீர் கற்றதனால் பயன் கட்டாயம் கிடைக்கும் அறிஞர்கள் ஆதரவும் உண்டு ஆரம்பத்தில் கடினமாக இருந்தது முடிவில் இலகுவாகும்.

மீனம்: நண்பர்களின் உதவியுண்டு சகோதர பாசம் தலைதூக்கும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு பொருளாதார நிலை சீரடையும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## “நாட்டின் வரலாற்றில் புதுமை செய்த ஸ்தாபனம்”

‘கிளாஸ்கோ’ ஸ்தாபன நிர்வாகி பெருமிதம்

(யாழ்ப்பாணம)

‘‘இருபது ஆண்டுகளுக்கு முன்னரே கிளாஸ்கோ சிலோன் லிமிட், தனது பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்து, இலங்கையின் வர்த்தக வரலாற்றில் புதுமையைச் செய்தது இதனால், பங்குகளை கொள்முதல் செய்த தனியாரும் போதிய லாபத்தைப் பெற்று வருகின்றனர்.’’

இவ்வாறு கிளாஸ்கோ சிலோன் லிமிட் நிர்வாக இயக்குனர், திரு, சி. எம். பியாசாட், யாழ். மாவட்ட வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார். இவ்வைபவம் ‘ஹோட்டல் அசோக்’ வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ‘‘இக்கம்பனி நூறு ஆண்டுகளுக்குமேல் இயங்கிவருகின்றது. ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட நாலாவது கம்பனியும் இதுவாகும், இக்கம்பனியில் 60,000 க்கு அதிகமான ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். இதனுடைய இலங்கைக் கம்பனி இரத்மலானையில் இயங்கிவருகின்றது இங்குபணிபுரியும் ஊழியர்களின் கடின உழைப்பால் நல்ல பலனை அடைந்து வருகின்றோம்.

யாழ். மாவட்டத்திலுள்ள நுகர்வோர்களை கவரும்வகையில், ஒவ்வொரு வத்தக நிலையங்களுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டியவர்களை, கௌரவிக்கும் வைபவமாக இது நடைபெறுகின்றது. உங்கள் பணியினால், நாமும் நமதுமக்களும் நல்ல பயனை அடைந்துள்ளோம் என்றார்.

முதல் பரிசைப் பெற்றவரான யாழ்ப்பாணம் வீரவாகு கம்பனியினருக்கு வெகுமதிப் பரிசை கம்பனி விளம்பர அதிபர் திரு. யோகன் அபயசிங்க வழங்கினார்.

இரண்டாம் பரிசை எஸ். சின்னத்துரை கம்பெனியும், மூன்றாம் பரிசை லக்ஸ்மி மெடிக்கல்ஸ் நிறுவனமும் பெற்றுக்கொண்டன. (கெ)

## சட்டவிரோத மின்பாவனை கண்டுபிடிப்பு

[கோண்டாவில்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை எல்லைக்குள் சட்டவிரோதமாக மின்சாரம் பாவிப்பது அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த வாரம் மாவட்ட அபிவிருத்திச்சபை அதிகாரிகள் நல்லூர் உபஅலுவலக எல்லைக்குள்ளும், கொக்குவில் உப அலுவலக எல்லைக்குள்ளும் பொலிசாரின் உதவியுடன் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன் மூலம் கொக்குவில் உப அலுவலக எல்லைக்குள் இரண்டு வீடுகளில் சட்டவிரோதமாக மின்சாரம்பாவிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதுடன் நல்லூர் உப அலுவலக எல்லைக்குள்ளும் ஒரு வீட்டில் சட்டவிரோத மின்பாவனை கண்டுபிடிக்கப்பட்டது.

## சிவபதம் அடைந்தார்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்திலுள்ள ஸ்ரீசிவ குருநாத குருபீடத்தில் கடந்த நாற்பது வருடகாலமாக ஒரு துறவியாக வாழ்ந்து வந்தவரான ஸ்ரீமத் நமசிவாயம் சுவாமி அவர்கள் நேற்றுக்காலையில் சிவபதம் அடைந்தார்.

இவரது இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்று அவரது பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தீயுடன்கலந்தது.


விவசாயிகளே!

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில் பாவியுங்கள் “பாயர்” உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய
“சேர்கோப்பூர்”
450 மி. லீ.—55 ரூபா 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) “ஹெடோனல் எம். 60%”
450 மி. லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) “ஹெடோனல் எம். 40%”
450 மி. லீ.— 35 ரூபா

(3) “ஹெடோனல் D. 55%”
250 மி. லீ.—55 ரூபா.

ஹெகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.
தொலைபேசி : 93563.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 4-45, 7-15
Goldie Hawn
Michael Sacks
SUGARLAND
EXPRESS
(action packed)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
2-வது வெற்றி வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
வண்ணத்திரை ஓவியம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
சிவகெங்கைச்சீமை

தவிர்க்கமுடியாத
சில காரணங்களால்
குறிப்பிட்ட சில
தினங்கள் மட்டும்
Rajah JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
The Fighters
(Color) (Adults only)
An action Karate Film
Full of Suspence and
Thrills

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கமல் - ரஜனி - ஜெமினி
ஸ்ரீபிரியா - ஜெயபாரதி
அலாவுதீனும்
அற்புத விளக்கும்
(கலர் - புதிய பிரதி)
விரைவில்!
ஆனந்த ராகம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கைநிறையக்
காசு
25ந் திகதி முதல்
தினசரி 10-15, 1-15,
4-15, 7-15
மூன்றும் பிறை

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30
27-11-83 வரை
நீர்க்குமிழி

வெலிங்டன்
(யாழ். நகர்)
If I have seen it,
you better see it.
This is the film not
to be missed.
36th Chamber
of Shaoline
தினசரி 4 காட்சிகள்

Regal Jaffna
Daily 10-30 a. m. 2-30
4-45, 7-00 only
MICHAEL CAINE
The Island
(Scope-Color)
விநாடிக்கு விநாடி விறு
விறுப்பையும், ஆச்சரி
யத்தையும் உண்டாக்
குவதுடன் உங்களை
மெய்மறக்கச்செய்யும்.

வெகுவிரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

## வெற்றுச்சாக்கு விற்பனை

### வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

மேற்படி வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் 2500 வரையிலானவெற்றுச் சாக்குகளும், பாவித்த லொறி ரயர்களும் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப்பத்திர பணமாகவும், ரூபா 250/- கேள்வி வைப்புப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு

செய்யப்பட்ட கேள்விக்காரர் மூன்றுநாட்களுக்குள் முழுப் பணத்தையும் கட்டி சாக்குகளைப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

குறிப்பு: பொருட்களைப் பார்வையிடவிரும்புவோர் சங்கக் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி- 28-11-83.

பதில் பொதுமுகாமையாளர்
10064

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காரைநகர் விளானைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை திருநாவுக்கரசுவின் மரணச் சொத்து விடயத்தில்.
-மரணமெய்தியவர்

இல. T. 3713
சிவா திருநாவுக்கரசு மகேசனின் தத்துவகாரராக சின்னத்தம்பி தம்பிராஜா விளானை, காரைநகர்.
-மனுதார்

1. சின்னத்தம்பி தம்பிராஜா பெண் மனோன்மணி, விளானை, காரைநகர்.
2. நாகலிங்கம் கணபதிப்பிள்ளை.
3. பெண் தவமணி, காரைநகர் தற்போது நைஜீரியா.

-எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆண்டு மார்கழி மாதம் 2ந்திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
(ஒப்பம்)
கு. குலசிங்கம்,

1983ம் ஆண்டு கார்த்திகை 18ம் திகதி.
10022

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, கருவிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிரம்ப நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
லயனல் பொஸ்கோ

மலர்வு: 6-4.1960
உதிர்வு: 23-11-1982

எமதன்புச் செல்வமே! நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாகிறது. இருந்தும் உமது நினைவு எம்மை விட்டு அகலவில்லை. உமது இனிய முகமும் விகடப் பேச்சும் எம் நெஞ்சை உருக்குதே! நீர் தொட்ட பொருட்களெல்லாம் உம்மை நினைவூட்டுகிறதே. உம்மை எப்படி நாம் மறப்பது?

உமது நினைவில் வாழும்
உமதன்புப்

பெற்றோரும்
சகோதரரும்
உற்றார்-உறவினரும்
அன்பர்களும்

பெரியவிளான்,
இளவாலை. (10061)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்றஉரும்பிராயை சேர்ந்த பொன்னையா சிவபாதம் என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
-மரணமெய்தியவர்

பொன்னையா
சிவபாதம் கைம்பெண்
இராஜேஸ்வரி
உரும்பிராய் மனுதார்
வழ. இல. T 3645

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரண சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு வைகாசி மாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்.

தயாரித்தவர்
அ. பரமராஜா
மனுதாரின் சட்டத்தரணி
31-10-83.

காலம் 2-12-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

9914

மஞ்சுளா — சந்திரமோகன்

## திருமணவைபவம் நன்றிநவிலல்

எமது குறுகியகால அழைப்பினை மனமுவந்தேற்றுப் பெருமளவில் ''சந்நிதி ஆலயத்திற்கு'' வருகை தந்து திருமணவைபவத்திற் கலந்துகொண்ட அடியார் அனைவருக்கும், சிறப்பாகத் திருமணவைபவத்தைத் தக்க சுபமுகூர்த்தத்தில் நிறைவுசெய்த பிரதம ஆலய குரு திரு. நல்லலிங்கம் அவர்கட்கும் அவர்தம் பாரியாருக்கும் மணமக்கள் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு அவர்தம் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். செல்வச்சந்நிதி ஆலய மடாதிபர் திரு. கந்தசாமியாரும் பாரியாரும் திருமணத்தம்பதிகளுக்கும் திருமண விருந்தினர்க்கும் சிறப்பாக விருந்துபசாரம் அளித்தமைக்கு சந்நிதிநாதன் திருவருள் என்றும் கிட்டட்டும் என வாழ்த்துகிறேன்.

மணமகள் இல்லத்தில் நடந்த வரவேற்புபசாரத்தில் கலந்து சிறப்பித்து அன்பளிப்புக்கள் பல விதத்திலும் நல்கிய அனைவருக்கும் தபால் அஞ்சல்சேவை மூலம் வாழ்த்தி அன்பளிப்புச் செய்தவர்கட்கும் சிறப்பாகக் கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலைய ஆசிரிய சகோதரத்துவத்துக்கும்நன்றிகூறி நிறைவுசெய்கிறேன். தனிப்பட்டமுறையில் ''நன்றி நவிலல்'' செய்யவில்லை.

எம். ஏ. கனகசிங்கம் குடும்பத்தினர்,
அதிபர், ''தி-இறெஸ்ற்''
யா/விஞ்ஞானக் கல்வி நிலையம், கோப்பாய்.
கிளிநொச்சி.
10076

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

பின்வரும் பாடங்களுக்கான அடுத்த பயிற்சியும் போதனைகளும் சனிக்கிழமை 3-12-83 ஆரம்பமாகின்றன.

1. கம்பியூட்டர் புறோகிறாமிங் (3 பிரிவுகள்) செய்முறைப் பயிற்சி உட்பட புதிய அப்பிள் கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும் (6 மாத காலம்)
2. மோட்டார் மெக்கானிசம் (6 மாத காலம்)
3. மின்சார இணைப்புகள் (Electrical Wiring) (1 மாத காலம்)
4. பிளம்பிங் பைப் இணைப்புகள் (ஒரு மாத காலம்)
5. ஆங்கில வகுப்புகள்

விண்ணப்பங்கள் அலுவலக நேரங்களில் எமது நிறுவனத்தில் பெறப்படும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு 30-11-1983 அன்று அல்லது அதற்கு முன்கிடைக்கக் கூடியதாக:- பதிவாளர், பற்றீசியன், இன்ஸ்ரிரியூட்ஸ், 59, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

வரையறுக்கப்பட்ட இடங்கள் மட்டும் உள்ளதால் முதல்வரும் விண்ணப்பங்களுக்கே முன்உரிமை கொடுக்கப்படும்.

பதிவாளர்,
10016

சிறந்த தரமான அவுஸ்திரேலியாவின்
பல்க்கன் பிறண்ட்பட்டர், சீஸ்
(FALCON BRAND BUTTER and CHEESE)
தற்பொழுது கிடைக்கின்றது.

| | | |
|---|---|---|
| பட்டர் விலைகள் | | |
| 250 கிறாம் | — ரூ. | 23/- |
| 125 கிறாம் | ··· ரூ. | 11-50 |
| சீஸ் விலைகள் | | |
| 4 அவுன்ஸ் | — ரூ. | 18/- |
| 12 அவுன்ஸ் | — ரூ. | 44/- |
| 250 கிறாம் | — ரூ. | 35/- |

மேலதிக விபரங்களுக்கும், தொடர்புக்கும் விநியோகத்திற்கும்
என். ஜெயரஞ்சிதன்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. 10054

வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
த பிறன்ஸ் கம்பனி
லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி
23680

பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# ''தடையையும் மீறி தி. மு. க. ஆர்ப்பாட்டம் நடத்தும்''

## தி. மு. க. எம். பி. அறிவிப்பு

(புதுடில்லி)

புதுடில்லியில் இன்று ஆரம்பமாகவுள்ள பொதுநலவமைப்பு நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளவந்திருக்கும் இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு எதிராக தி.மு; க. எம்.பீக்கள் இன்று திட்டமிட்டபடி கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவார்களென்று தி.மு.க. எம் பி. திரு. ரி. நாகரத்தினம் தெரிவித்தார்.

புதுடில்லியில் சகலவித ஆர்ப்பாட்டங்களுக்கும் மூன்று வார காலத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், இத்தடையையும்மீறித் தாம் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக தாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி திரு. ஜெயவர்த்தனவிற்கு எதிரான கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி நடைபெறுமென்று உலகத் தமிழ் இளைஞர் பேரவையைத் தலைவர் திரு. இரா. ஜனர்த்தனம் தெரிவித்தார். (இ-வெ)

---

### சாயிபாபா பிறந்ததினம்

[யாழ்ப்பாணம்]

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 58-வது பிறந்த தினம் இன்று யாழ். மத்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி குழுவினரால் யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சின சபா மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

ஃ ஃ ஃ

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 58-வது பிறந்த தினக் கொண்டாட்டம் மானிப்பாயில் சாயி சிறிமதி சிறிகாந்தின் இல்லத்தில் இன்று நடைபெறவுள்ளது. [து]

---

### தமிழ் மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து எதுவும் கூற மறுத்த திரு. அமிர்தலிங்கம் பத்திரிகையாளர் மத்தியில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''எல்லா வல்லமைகளும் சகல அதிகாரங்களும், கொண்டவர் ஜனதிபதி. தமிழ் மக்களின் பிரச்னைகளையும் தீர்க்க அவர் முன்வர வேண்டும்.

எமது யோசனைகளையும் திட்டங்களையும் நாம் சொல்லிவிட்டோம். மாற்றுவழி ஏதாவது இருப்பின் அவர்கள் அந்த திட்டங்களைவெளியிடவேண்டும்.''

#### ரவியின் கடிதம்

''எனது மகன் ரவியின் கடிதம் மூலம் லிபியாவுக்கும் எனக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது. நான் லிபியா போனது ஜனதிபதிக்கும்தெரியும். ஒழிந்துமறைந்து நான் போகவில்லை. லிபியா விஜயத்தை அப்பா கவனிக்கிருர் என்று கடிதத்திலிருந்ததை மொழிபெயர்ப்பாளர் லிபிய விடயத்தை என்று தவருக மொழிபெயர்த்ததால் வந்த தவறு இது. இதற்காக வருந்துகிறேன்.

''ஜூலை கலவரத்தை மறந்து விட முடியாது. அந்த வடு மறையாது. இந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் எத்தகைய நெருக்கடி தோன்றும் என்பதை ஜனதிபதியும் அறிவார். எனவே சரியான திட்டத்தைஜனதிபதி சமர்ப்பிக்க வேண்டும்'' (கு)

---

# இப்படியும் நடக்கிறது

இலங்கைத் தமிழர் துயர் துடைக்க இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில், பலவிதமான முயற்சிகள்—நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே. ஆனாலும், காதிலே விழாத செய்திகளும் உண்டு.

இலங்கைத் தமிழர் துயர் நீங்கவும், நிரந்தர சமாதானம் நிலவவும் வேண்டி தஞ்சைப் பெரிய கோவிலில் நாதஸ்வர 'மழை' பொழியப்பட்டது!

நாதஸ்வரக் கலாநிதி வித்துவான், எம். பி. சேதுராமனும் மற்றும் பல சிறந்த நாதசுரக்கலைஞர்களும் இறைவனைப் பக்தியுடன் பிரார்த்தித்து, இரண்டு மணி நேரம் நாதசுர 'அர்ச்சனை' செய்தனர்.

இதே மாதிரி, மதுரை மீனுட்சி அம்மன் கோவிலிலும் ஏராளமான நாதசுரக் கலைஞர்கள் ஒன்றுகூடி கானம் பொழிந்தனர்!

இந்த இசை கானம், நாதர்முடி மேலிருக்கும் நாகபாம்பையும் மெய்மறக்கச் செய்து இறைவனின் நாமங்களில் ஒலித்திருக்கும் என்று நேரில் பார்த்து பரவசமடைந்த பக்தர்கள் மெய்சிலிர்த்துக் கூறினர்களாம்!

— ஊடுருவி

---

யாழ். அரச அதிபரின் கோரிக்கைமீது

# மற்றுமொரு உணவுக்கப்பல் காங்கேசன் வந்தது

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை லங்கா சிமெந்து துறைமுகத்திற்கு, 12000 மூடைகள் மா, ஆயிரம் மூடை சீனி ஆகிய உணவுப் பொருட்களுடன் ''மேர்க் செறண்டிப்'' என்னும் கப்பல் வந்து சேர்ந்துள்ளது.

வடபகுதியில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து வடபகுதி அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு விடுத்த அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து இக்கப்பல் இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கப்பலிலிருந்து இரு நாட்களில் பொருட்களை இறக்க வேண்டி இருப்பதால் நேரடியாக வடபகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளுக்கு மா, சீனி ஆகிய பொருட்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு.எஸ். நடராசா எடுத்துள்ளதாக கப்பலின்ஏஜென்டுகளான எமசர்ஸ் க. ஜெயபாலசிங்கம் கம்பனியாரின் பிரதிநிதி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

---

### உப அலுவலகங்கள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பி.பாலசிங்கம் யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு எஸ். சிவதாசன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி எல். பற்றிக் யாழ். அபிவிருத்தி சபை அலுவல்களின் உதவிச் செயலாளர் திரு. பொ. பாலசிங்கம் ஆகியோரும் மற்றும் உயர் அதிகாரிகளும் சமுகமளித்தனர்

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின்உபஅலுவலகங்களின் கீழ் இயங்கும் மின்சாரப் பகுதிகளிலிருந்து களவாக மின்சாரம் பெறுவதைத் தடை செய்தல்; யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் உள்ளகக்கணக்காய்வு பிரிவொன்றை நிறுவுதல்; உபஅலுவலகங்களின் வருமான நிலுவைகளைத் துரிதமாக அறவிடுதல் வருமானத்தை அதிகரித்தல்; உபஅலுவலகங்களில் களவு, துஷ்பிரயோகம் செயற்றிறமையின்மை போன்றவற்றை தடுத்தல்; பொதுமக்களுடைய கருமங்களைத் தாமதமின்றி நிறைவேற்றுதல் ஆகியன குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டது.

இவ்விடயங்களுக்கான செயல் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, பிரதி-உதவிச் செயலாளர்களுக்குப் பணிப்புரைகள் வழங்குமாறு யாழ். மாவட்டச் செயலாளர் திரு. தேவநேசன் நேசையாவை, யாழ். மாவட்ட அமைச்சர் கேட்டுக் கொண்டார். (மா-கு)

---

### தெய்வத்---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வைரமுள்ள மரங்களெல்லாம் சந்தன மரங்களாக மாறுகின்றனவாம். பப்பாளி, மூங்கில் போன்ற வைரமற்ற மரங்களோ அப்படி மாறுவதில்லை, அதுபோல பகவத்கடாட்சம் பொங்கிவரும்போது பக்தியும் நற்குணமும் எவரிடமுள்ளனவோ அவர் உடனே பரிசுத்தராகித் தெய்வீகம் நிரம்பியவராகின்ருர். மனத்துக்கண் மாசிலனுயபோது இந்த அனுபவம் தானே சித்திக்கின்றது.

உலகப்பற்றுள்ள உபயோக மற்றவர்களோ எப்பொழுதும் போலவே இருப்பார்கள்.

ஈசுவரனை நினைந்துசெய்யும் எந்தக்கைங்கரியமும் மனிதனை இறைவனுக்கு அருகில்அழைத்துச்செல்லும் தன்மைஉடையது. அதுபோல பகவானை நாம் நினைத்து எக்கைங்கரியத்தைத் தொடங்கினுலும் அவர் எமக்கு அருகே இருந்து அவற்றைச் செவ்வனே முடித்து வைக்கின்ருர். மனிதன் தன்னுடைய சூழலை வென்றிருக்கின்ருன். ஆனல் அந்த முயற்சியில் அவன் தன்னுடைய ஆத்மீகத்தை இழந்துவிட்டான். விஞ்ஞானி பரிசோதனைக் குழாயிலிருப்பதை மாத்திரமே நம்புகின்ருன். விஞ்ஞானத்தின்சாதனைகளால் ஈட்டிய வெற்றிகள் அவரையும் மாற்றக்கூடியதாய் அமைந்துவிட்டன. அதனல் அவர்கள் தம் முடிவுக்கப்பால் ஒன்றையும் பார்க்கமுடிவதில்லை. பகவானைத்தேடிச் சென்ற விஞ்ஞானிகள் தற்போது தமது முடிவை மாற்றிக்கொண்டார்கள்.

---

### பாவனைப் பொருட்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் குறைக்கப்படவுள்ளன.

வியாபார மொத்த விற்பனவுவரி 1 வீதத்திலிருந்து ஒரு வீதமாக குறைக்கப்பட்டிருப்பதால் இந்த பாவனைப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளன. (கு)

---

### வடக்கு, கிழக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''பிலியத்தை, அம்பலாங்கொட, திஸ்ஸமகராகம, அநுராதபுரம், கொஸ்கம ஆகிய இடங்களிலும் துப்பாக்கிகள் களவாடப்பட்டுள்ளது.

''இரத்மலானை விமான நிலையத்தில் இம்மாதம் 3ம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானமொன்றுலிருந்து குண்டு ஒன்று வெடித்தது. அந்த விமானம் சுவீடிஷ் பிரஜையொருவருக்குச் சொந்தமானது. குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் பல துண்டுப் பிரசுரங்களும் கண்டு பிடிக்கப்பட்டது.

''அநுராதபுரத்தில் இராணுவ வாகனமொன்றை மறித்த இனந்தெரியாத குழுவொன்று, இராணுவ வாகனத்திலிருந்த இராணுவ வீரரைமயக்கமடையச்செய்து, வேறு ஓர் இடத்திற்கு எடுத்துச் சென்று, அவரிடம் இராணுவத் தொடர்புமுறைகள் குறித்து அறிந்து கொண்டார்களாம்'' என்ருர். (இ-வெ]

---

### பிரின்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர்.பிரேமதாசா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

இவர் மீதான விசாரணைகள் முடிவுற்றுள்ளதால் விடுதலை செய்யப்படுவாரென்றும் பிரதமர் கூறினர்.

தற்போது தலைமறைவாகியுள்ள ரோகண விஜயவீராவும், வாசுதேவநாணயக்காராவும் பொலிசாரிடம் சரணடைந்தால், அவர்களும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்படுவார்கள் என்று பிரதமர் தெரிவித்தார்.

ஜூலை இனக்கலவரங்களையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் குற்றமிழைக்காதிருந்தால் விடுதலை செய்யப்படுவார்கள் அல்லது அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் பிரதமர் பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-வெ]

---

# சிமெந்தின்விலை அதிகரிப்பு!

(மாவிட்டபுரம்)

சிமெந்தின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் சிமெந்து ஒரு பைக்கட் 83 ரூபாவாக விற்கப்பட்டு வந்தது. கடந்த 18ம் திகதி முதல் சிமெந்தின் விலை பைக்கட் ஒன்றுக்கு 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளதால் மேற்படி தொழிற்சாலையில் சிமெந்தின்விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 93 ரூபாவாக தனிப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாது கூட்டுத்தாபனம், கொந்தராத்துக்காரருக்கும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கு நேரடியாக விநியோகிக்கும் சிமெந்தின் விலை 101 ரூபாவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### வட்டுக்கோட்டையில் நாளை கூடி ஆராய்வர்

[மானிப்பாய்]

வட்டுக்கோட்டைத் தொகுதியைச்சேர்ந்தஇடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களையும், புதிய மாணவர்களையும் நாளை மாலை வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில்ஒன்றுகூடும்படி அழைக்கப்பட்டுள்ளனர். எதிர்கால நடவடிக்கை பற்றி ஆராயவுள்ளதாகஅமைப்பாளர்கள் தமது அழைப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

---

## மரண அறிவித்தல்

### P. V. சுப்பிரமணியம்

களுத்துறை பிரபல வர்த்தகர் வைரவநாதர் சுப்பிரமணியம் காலமாகிவிட்டார்.

இவர் சிவலிங்கம் (புகையிலைக் கூட்டுத்தாபனம்), நடராஜா (1868 யாழ். பொலிஸ் நிலையம்), செல்வநாயகம் (காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை), மகாலிங்கம், சுந்தரலிங்கம், செல்லத்துரை, யோகேஸ்வரி, நேசம்மா, சரஸ்வதி, அன்னபாக்கியம் (தெல்லிப்பழை·அரசினர் வைத்தியசாலை), பரமேஸ்வரி ஆகியோரின் தந்தையும், அப்புத்துரை (காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை), இராசையா (காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை), சோமபாலன் (ஓமான்) ஆகியோரின் மாமனும் செல்வராஜா, குணசிங்கம், பாலசிங்கம், சின்னக்கிளி ஆகியோரின் மைத்துனரும் ஆவார் 24 - 11 - 83 வியாழக்கிழமை மாலை இரண்டு மணிக்கு அன்னரின் பூதவுடல் ''திருமகள் வாசம்'' தெல்லிப்பழை கிழக்கு இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைக்காக தெல்லிப்பழை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். (10084)

---

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதர் தம்பு

சுவாமி நாதர் தம்பு [துப்பாசிரியர்] மலேயன் பென்சனியர் காலமாகி விட்டார். இவர் மல்லாகத்தை சேர்ந்தவரும் செல்லம் (பூரணம்) தின் அன்புக் கணவரும் சுந்தரநாயகி(அவுஸ்திரேலியா), மகேஸ்வரி இராஜேஸ்வரியின் அன்புத்தந்தையும் வைத்திய கலாநிதி சு. சின்னத்தம்பி (அவுஸ்திரேலியா) காலம் சென்ற T. K. சேகரம் (எஸ்டேட் சுப்பிரின்டன்), காலஞ்சென்ற செ. ஸ்ரீதர்மநாதனின் (ஆசிரியர்) அன்பு மாமனும், கண்ணன், மணிவண்ணன், தீபா, சுஜி, மனே, குக்கு, ஸ்ரீதாவின் அன்பு பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (23 - 11 - 83) புதன் கிழமை காலை 10-00 மணிக்கு மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

''ஸ்ரீபதி'', K. K. S. வீதி, மல்லாகம். (10085)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், வெள்ளைக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box, 49, Telephone, 22389 —24126.